Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 135 of 2024

DATE : 20.05.2025

Depositions of witness for Prosecution

PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | முத்தையா | Caste | |
| Father/Husband's Name | சுப்பையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**
**முதல் விசாரணை : –**

1) நான் களத்தூரில் வசித்து வருகிறேன். நான் பட்டாசு ஆலையில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் விபத்தில் இறந்தவர் எனது மச்சான். அ.சா.1 ஐ தெரியும். வழக்கின் எதிரியை தெரியும். கடந்த 17.03.2022 ம் தேதி சிவகாசி வேலைக்கு செல்வதற்காக நானும் வழக்கில் இறந்த சிவசாமி என்பவரும் எங்கள் ஊரில் இருந்த நத்தம்பட்டி பஸ் ஸ்டாப்பிற்கு நடந்து சென்றோம். அதற்கு முன்பு ஒரு பாலம் இருந்தது அந்த பாலம் வழியாக ஓரமாக சென்றோம். எங்களுக்கு பின்புறம் வந்த டாடா ஏஸ் வாகனம் வேகமாக வந்து சிவசாமி என்பவரை மோதி பாலத்திற்கு அருகேயுள்ள ஆற்றுக்குள் விழுந்துவிட்டார். அவருக்கு மூக்கிலும், தொடையிலும், காலிலும் காயம் இருந்தது. எனது தம்பி சின்ன இருளப்பனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். 108 க்கும் போன் மூலம் தகவல் சொன்னோம். 108 ஆம்புலன்சில் உள்ளநபர்கள் சிவசாமியை பரிசோதித்து இறந்து விட்டதாக கூறிவிட்டார்கள். பின்பு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். இது சம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். நான் அதில் அறிவேன் சாட்சியாக 2 வது கையொப்பம் செய்துள்ளேன். **அந்த அறிவேன் சாட்சியாக 2 வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் பின்பு சிவசாமியை பிரேத பரிசோதனை பண்ண எங்களிடம் பிரேத விசாரணை செய்தார்கள். அதன் பின்பு உடலை பெற்றுக்கொண்டு நல்லடக்கம் செய்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு